# இழந்த கல்வியை மீளப்பெறுவதற்கான திட்டம்.

பாடம் : நாடகமும் அரங்கியலும்

தரம் : 08

பாடவேளைகள் : 60 (தரம் 7 -24 பாடவேளைகள், தரம் 8 - 36 பாடவேளைகள்)

| தரம் | தேர்ச்சி | செயற்பாடு | அத்தியாவசியக் கற்றல் பேறுகள் | விடய உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| **தரம் 7**<br>**24 பாட வேளைகள்** | 1.0<br>நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.6<br>வெகுசன ஊடகங்களில் வரும் நாடகப் படைப்புக்கள் பற்றிக் கலந்துரை யாடுவோம். | • வெகுசன ஊடகங்களில் வரும் நாடகப் படைப்புக்கள் ஊடகங்களின் தனித் தன்மைக்கேற்ப வேறுபடுவதை நயந்து கூறுவர் | • வெகுசன (திரள்நிலை) ஊடகங்களில் வெளிவரும் நாடகப்படைப்புக்கள். | 01 |
| | | 1.7.2<br>அரங்கியலும் நாளாந்த வாழ்விலும் துணைக்கலைகளின் பயன்பாடு குறித்த வேறுபாட்டை எடுத்துரைப்போம். | • அரங்கின் துணைக் கலைகளுக்கும் அவற்றின் நாளாந்த வாழ்வின் மீதான பயன்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துரைப்பார். | • நாளாந்த வாழ்வில் இருந்து வேறுபட்டு நிற்கும் அரங்கின் துணைக்கலைகள். | 01 |
| | | 1.8<br>சிறுவர் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பயன்பாடு சிறுவர் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பயன்பாடு பற்றி அறிவோம். | • சிறுவர் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களைப் பயன்படுத்துவார் | • சிறுவர் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பயன்பாடு | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.0 கற்பனையை நெறிப்படுத்தி சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். | 2.5 அறிவியற் புனைவு சார்ந்த நாடக எழுத்துருவை எழுதுவோம் | • அறிவியற் புனைகதைகளை நாடக எழுத்துருவாக மாற்றுவார். | • அறிவியற் புனைகதைகளைத் தழுவி எழுத்துருவை எழுதுதல் | 01 |
| | | 2.6 காட்சி விதானிப்பைத் திட்டமிடுவோம் | • எழுத்தருவை அடித்தளமாகக் கொண்டு காட்சி விதானிப்பைத் திட்டமிடுவார். | • காட்சி விதானிப்பைத் திட்டமிடுதல். | 01 |
| | | 2.7 எழுத்துருவிற்கு அமைவாக அரங்கக் கைப்பொருள்களைத் தயாரிப்போம். | • கைப்பொருட்கள் ஆக்குவதில் விருப்பம் காட்டுவார். | • அரங்கக் கைப்பொருட்களைத் தயாரித்தல் | 01 |
| | | 2.8 சத்தங்கள் ஒலி விளைவுகளைப் படைப்போம். | • நாடகவாக்கத்தின் பொருட்டு அவசியமான சத்தங்கள், ஒலிவிளைவுகளைப் படைப்பார். | • சத்தங்கள் ஒலி விளைவுகளைப் படைத்தல் | 01 |
| | | 2.10 வேடஉடைகளை வடிவமைத்து அவற்றைத் தரிப்போம். | • வேடஉடை தயாரிப்பார் | • வேடஉடைகளை வடிவமைத்தல் | 01 |
| | | 2.11 பாத்திர ஒப்பனையை மேற்கொள்வோம். | • நாடகப்பாத்திரங்களுக்கு ஏற்ப ஒப்பனை செய்து கொள்வார். | • பாத்திர ஒப்பனையை மேற்கொள்ளல் | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2.12 நாடக எழுத்துருவை நாடகவாக்கம் செய்வோம். | • நாடக எழுத்துருவை நாடகமாக நடித்துக் காட்டுவார். | • நாடகவாக்கம் | 01 |
| | 3.0. நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிப் பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.4 நடிப்பிற்காக உடலைத் தயார்படுத்துவோம் : தளர்த்துவோம் : பயன்படுத்துவோம் | • நடிப்பின் பொருட்டு உடலைத் தயார்படுத்தவல்ல பயிற்சிகளைச் செய்து காட்டுவார். | • உடலைத் தயார்படுத்தும் அரங்கப் பயிற்சிகள் | 01 |
| | | 3.5 உடல், குரல் ஒத்திசைவுப் பயிற்சிகளை மேற்கொள்வோம். | • பயிற்சிகளைச் செய்து உடல், குரல் ஒத்திசைவு காட்டுவர். | • உடல், குரல் ஒத்திசைவு அரங்கப் பயிற்சிகள் | 01 |
| | | 3.6.1 ஆடுதல், பாடுததல் வழியாகப் பாத்திரங்களைச் சித்திரிப்போம். | • மரபு வழி ஆடல், பாடல் வழியாகப் பாத்திரங்களைச் சித்திரிப்பார். | • ஆடுதல், பாடுதல் வழி பாத்திரச் சித்திரிப்பு. | 01 |
| | | 3.6.2 ஆடல், பாடல்களுக்கான தாளப் பிரயோகத்தினைப் பயில்வோம். | • பாத்திரச் சித்திரிப்பை முனைப்புறுத்துவதற்காக வாத்தியப் பிரயோகம், தாளம் என்பவற்றை மேற்கொள்வார். | • வாத்தியப் பிரயோகம் <br> • தாளம் போடுதல் | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3.8 ஊமச்சித்திரிப்பில் ஈடுபடுவோம | • ஊமச்சித்திரிப்பின் வழியாக அர்த்தப்பாட்டை வெளிப்படுத்துவார். | • ஊமச்சித்திரிப்புகள் | 01 |
| | 4.0 இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக,பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.4 சமூக அறஞ்சார் பெறுமானங்களைக் கொண்ட நாடகச் சூழமைவுகளைக் கண்டறிந்து கொள்வோம். | • நாட்டார் கதைகளுட் காணப்பெறும் சமூக அறம் சார்ந்த நாடகச் சூழமைவுகளைத் தெரிந்தெடுப்பார். | • சமூக அறஞ்சார் பெறுமானங்களைக் கொண்ட நாடகச் சூழமைவுகள். | 01 |
| | | 4.5 கோலாட்டம், /களிகம்பை ஆடுவோம். | • கோலாட்டம், /களிகம்பை ஆடிக்காட்டுவார். | • கோலாட்டம்/ களிகம்பு | 01 |
| | 5.0 நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1.1 “கண்டறியாத கதை” நாடக எழுத்துருவை வாசிப்போம். | • “கண்டறியாத கதை” சிறுவர் நாடகத்தின் கரு, விடயப்பொருள், பாத்திரங்கள், சொல்லாடல் என்பவற்றை இனங்கண்டு கூறுவார். | • நாடக எழுத்துருவை நயத்தல் “கண்டறியாத கதை” குழந்தை ம.சண்முகலிங்கம்<br>- கருப்பொருள்<br>- விடயப்பொருள்<br>- பாத்திரங்கள்<br>- சொல்லாடல் | 02 |
| | | 5.2.1 சிறுவர் நாடகத்தை நயப்போம். | • சிறுவர் நாடக ஆற்றுகையை நயந்து பாராட்டுவார் | • சிறுவர் நாடக ஆற்றுகையை நயத்தல்.<br>- சித்திரிப்பு | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5.2.2<br>சிறுவர் நாடக ஆற்றுகையில் துணைக்கலைகளின் பயன்பாட்டை நயப்போம். | • நாடகத்தில் துணைக்கலைகளின் சேர்க்கையாற் பெறப்படும் அழகியற் பரிமாணத்தால் வியப்புறுவார் | • துணைக்கலைகளின் பயன்பாடு | 01 |
| | | 5.3<br>'கண்டறியாத கதை' நாடக ஆற்றுகையை மதிப்பீடு செய்வோம். | • நாடக ஆற்றுகை பற்றித் தமது கருத்துக்களை முன்வைப்பார் | • நாடக ஆற்றுகை பற்றித் தமது கருத்துக்களை முன்வைப்பார். | 02 |
| | | | | | |
| **தரம் 8**<br>**36** பாட வேளைகள் | 1.0<br>நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.1<br>நாடக எழுத்துருவில் கரு, சொல்லாடல், பாத்திரங்ளை இனங்காண்போம். | • நாடக எழுத்துருவில் இனங்காணுங் கூறுகளை எடுத்துரைப்பார்.<br>• நாடகத்தில் சொல்லாடலின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.<br>• நாடகச் சொல்லடால்கள் மூலம் கதைப்பொருள் வெளிப்படும் என்பதனை எடுத்துரைப்பார்.<br>• பாத்திரங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பார். | • நாடக எழுத்துருவை இனங்காணல். | 01 |
| | | 1.2 நாடக எழுத்துருவில் அமைந்துள்ள கூறுகளான கரு, சொல்லாடல், பாத்திரங்கள் என்பன பற்றி அறிந்து கொள்வோம். | • நாடக எழுத்துருவில் அமைந்துள்ள கூறுகளை அறிந்து கூறுவார்.<br>• நாடகத்தில் சொல்லாடலின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.<br>• நாடகச் சொல்லடால்கள் மூலம் கதைப்பொருள் வெளிப்படும் என்பதனை எடுத்துரைப்பார்.<br>• பாத்திரங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பார். | நாடகத்தின்<br>• கரு<br>• சொல்லாடல்<br>• பாத்திரங்கள் | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1.3<br>நாடகத்தில் நேர் மற்றும் மறுதலை உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வோம். | • வாழ்வில் பல்வகை மனிதர்களையும் புரிந்து கொள்ள முற்படுவார்.<br>• மற்றவர்களின் நிலையில் நின்று அவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுவார்.<br>• நாடகம் வாழ்வைப் பிரதிபலிக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வார். | • நேர் மற்றும் மறுதலையாக உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுதல். | 01 |
| | | 1.4.<br>நாடக எழுத்துருவொன்றிலுள் ள நால்வகைச் சித்திரிப்புக்கான அம்சங்களைக் கண்டறிவோம். | • நால்வகைச் சித்திரிப்புக்களை நினைவுபடுத்துவார்.<br>• எழுத்துருவிலுள்ள பாத்திரங்களுக்கான நால்வகைச் சித்திரிப்புக்களை எடுத்துரைப்பார். | • எழுத்துரு வழியாக மேற்கிளம்பும் நால்வகைச் சித்திரிப்புக்கள் | 01 |
| | 2.0<br>கற்பனையை நெறிப்படுத்தி சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். | 2.1<br>விழுமியம் சார்ந்த கதைகளை ஆக்குவோம். | • ‘கதை’ பற்றிய விளக்கத்தை நினைவுபடுத்துவார்.<br>• கதைகளினூடாக விழுமியம் சார் கருத்துக்கள் வெளிப்டுத்தப் பெறுவதைக் காண்பார்.<br>• விழுமியக் கருத்துக்கள் உள்ள கதைகளைச் சேகரிப்பார்.<br>• கதை புனைவதில் ஆர்வம் காட்டுவார். | • நாடக எழுத்துருவாக்கம் (விழுமியம் சார் கதை நிலைப்பட்ட)<br>• நாடகத்துக்குப் பொருத்தமான சூழமைவுகள். | 01 |
| | | 2.2<br>விழுமியம் சார்ந்த கதைகளை நாடகமாக்குவோம். | • விழுமியம் சார் கதையிலுள்ள நாடகச் சூழமைவுகளை இனங்காண்பார்.<br>• அந்நாடகச் சூழமைவுகள் பற்றிக் கருத்துரைப்பார்.<br>• விழுமியம் சார் கதைகளை நாடக எழுத்துருவாக மாற்றுவார். | • நாடக எழுத்துருவாக்கம் (விழுமியம் சார் கதை நிலைப்பட்ட)<br>• நாடகத்துக்குப் பொருத்தமான சூழமைவுகள். | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2.3 நாடக எழுத்துருக்களை செம்மையாக்கு வோம். | • ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருக்கள் பற்றிய தமது கருத்துக்களை முன்வைப்பார்.<br>• ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் பலம், பலவீனங்களை இனங்காண்பார்.<br>• நாடக எழுத்துருவினை மேம்படுத்துவது தொடர்பாகக் கருத்துக்களை முன்வைப்பார்.<br>• சிறந்த நாடக எழுத்துருக்களை எழுதுவதில் ஈடுபாடு காட்டுவார். | • நாடக எழுத்துருவை மேம்படுத்தல். | 01 |
| | | 2.4 பாத்திரங்களைச் சித்திரிப்போம். | • பாத்திரத்தின் உள்ளார்ந்த இயல்புகளை மிக நெருக்கமாக வெளிப்படுத்தும் நடிகர்களைத் தெரிவு செய்வார்.<br>• சித்திரிப்பின் போது பாத்திரத்தின் இயல்பைத் தமது இயல்பாக மாற்றிக் கொள்வார்.<br>• பாத்திரப் பண்பை வெளிப்படுத்துவார். | • பாத்திரத் தெரிவும் பாத்திரச் சித்திரிப்பும் | 01 |
| | | 2.5 காட்சியமைப்பை வரைந்து வர்ணம் தீட்டுவோம். | • காட்சி விதானிப்பிற்கான திட்டத்தைத் தயாரிப்பார்.<br>• நாடகத்தின் மையப்பொருளை முனைப்புறுத்தும் வகையில் கூட்டாகச் சேர்ந்து காட்சியை வரைந்து வர்ணம் தீட்டுவார். | • காட்சியமைப்பை வரைந்து வர்ணம் தீட்டுதல். (தெரிந்தெடுக்கப் பெற்ற பகுதி ஒன்றைக் கொண்டு) | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2.6 எழுத்துருவுக்கேற்பப் புத்தளிப்பு இசைக்கருவிகளை ஆக்கிப் பிரயோகிப்போம். | • புத்தளிப்பு இசைக் கருவிக்கான மூலப்பொருள்களை இனங்காண்பார்.<br>• புத்தளிப்பு இசைக்கருவிகளை ஆக்குவார்.<br>• புத்தளிப்பு இசைக் கருவிகளைப் பிரயோகிப்பார். | • எழுத்துருவுக்கேற்பப் புத்தளிப்பு இசைக்கருவிகளை ஆக்குதலும் பிரயோகித்தலும் | 01 |
| | | 2.7 வேடஉடை மாதிரிகைகளை வடிவமைப்போம் | • வேடஉடைக்குப் பொருத்தமான நிறங்கள், இழைமானங்கள் ஆகியவற்றைத் தெரிவு செய்வார்.<br>• திட்டமிடும் வேடஉடை மாதிரிகைகளை துணிகளால் வடிவமைத்துக் வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுவார்.<br>• நாடகத்திற்குப் பொருத்தமான மாதிரிகை உடைகளைத் தயாரிப்பதில் ஈடுபாடு காட்டுவார். | • வேடஉடைகளை மாதிரிகையாக (Samples) வடிவமைப்புச் செய்தல்.<br>( துணிகளைப் பயன்படுத்தி ஒட்டுதல்.) | 01 |
| | | 2.8 ஒப்பனைக்கான மாதிரிகையை வரைவோம். | • ஒப்பனைக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து வருவார்.<br>• ஆக்கப் பெற்ற நாடகத்திற்குப் பொருத்தமான மாதிரி ஒப்பனைகளை வரைந்து காட்டுவார். | • ஒப்பனைக்கான மாதிரிகையை வரைதல். | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2.10<br>நாடகச் செயலிக்க ஒத்திகையை மேற்கொள்வோம். | • நாடகச் ஒத்திகையின் முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பார்<br>• எழுத்துருவுக்கு அமைவாக நாடக ஒத்திகையில் ஈடுபடுவார்.<br>• நாடக ஒத்திகையின் செயலொழுங்குகளைக் கூறுவார். | • நாடகச் செயலிக்க ஒத்திகை | 01 |
| | | 2.11<br>நாடகத்தை ஆற்றுகை செய்வோம், மதிப்பிடுவோம். | • நாடக ஆற்றுகைக்கு அவசியமானவற்றைத் தயார் செய்வார்.<br>• நாடக எழுத்துருவை ஆற்றுகை செய்வதில் ஈடுபடுவார்.<br>• ஆற்றுகை தொடர்பான மதிப்பீட்டை முன்வைப்பார்.<br>• விமரிசனங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை வெளிப்படுத்துவார். | • ஆற்றுகையும் - மதிப்பீடும் | 02 |
| | 3.0.<br>நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிப் பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.1<br>நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கான அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவோம். | • நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள உதவும் அரங்க விளையாட்டுக்கள் சிலவற்றைக் கூறுவார்<br>• அவற்றை விளையாடும் முறையை எடுத்துரைப்பார்.<br>• அவ்வரங்க விளையாட்டுக்களை விளையாடுவார். | • நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கான அரங்க விளையாட்டுக்கள். | 01 |
| | | 3.2.1<br>உடலை முனைப்புறுத்தும் பயிற்சிகளைச் செய்வோம். | • உடல், உள முனைப்புறுத்தும் பயிற்சிகளைப் பட்டியலிடுவார்.<br>• அந்தப் பயிற்சிகளைச் செய்யும் முறையை விவரிப்பார்.<br>• பயிற்சிகளினூடாக நடிப்பதற்குத் தயாராவார். | • ஆக்கச் செயற்பாடுகள் மூலமான உடல், உள ஒத்திசைவுப் பயிற்சிகளில் ஈடுபடுவோம். | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3.2.3<br>மொழியல்லா மொழி வழியாகப் பாடுவோம், சொல்லாடுவோம் | • மொழியல்லா மொழி வழியாகப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.<br>• மொழியல்லா மொழிப் பயிற்சிகள் மூலம் பெற்ற அனுபவங்களை நடிப்பிற்குப் பயன்படுத்துவார்.<br>• குரலின் வீச்சு தொனி போன்றவற்றை அறிந்து மொழியல்லா மொழி வழியாகச் சித்திரிப்பார். | • குரற் பயிற்சிகள்<br>- மொழியல்லா மொழியில் பாடுதல், சொல்லாடுதல். | 01 |
| | | 3.3<br>பாத்திர இயல்பு மேற்கிளம்புமாறு சொல்லாடுவோம். | • நாடகச் சொல்லாடல் என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• நாடகச் சொல்லாடலில் ஈடுபடுவார்.<br>• நாடகச் சொல்லாடல்களைக் கருத்து வெளிப்பாட்டுடன் பேசுவார் | • கருத்து வெளிப்பாடு சார்ந்த சொல்லாடல்கள்<br>( தெரிந்தெடுக்கப் பெற்ற நாடக எழுத்துருக்களும் பிறவும்) | 01 |
| | | 3.4<br>நாடகப் பாடல்களைப் பாடுவோம் | • தெரிந்தெடுக்கப்பெற்ற சிறுவர் நாடகப் பாடல்களைப் பாடுவார்.<br>• நாடகங்களைச் செழுமைப்படுத்துவதில் சிறுவர் பாடல்களின் வகிபங்கினை எண்ணி வியப்புறுவார். | • சிறுவர் நாடகப் பாடல்கள் | 01 |
| | | 3.5<br>பல்வேறு ஊமச் சித்திரிப்புக்களைச் சித்திரித்து மகிழ்வோம். | • ஊமம் என்பதை விளங்கிக் கூறுவார்.<br>• ஊமம் சார் பயிற்சிகளில் ஈடுபடுவார்.<br>• ஊமம் வழியாகச் சித்திரிப்பார். | • ஊமம் சார் நுட்பங்களைப் பயிலுதல் | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3.6<br>நாடகப் பாங்கான கவிதைகளை நிகழ்த்துவோம். | • நாடகப்பாங்கான கவிதைகள் பற்றி அறிந்து கூறுவார்.<br>• நாடகப்பாங்கான கவிதைகளை நிகழ்த்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை நினைவுபடுத்திக் கூறுவார்.<br>• அவற்றின் உள்ளார்ந்த அர்த்தம் வெளிப்படும் வகையில் நிகழ்த்துவார். | • தெரிந்தெடுக்கப் பெற்ற நாடகப் பாங்கான கவிதைகளை நிகழ்த்திப் பார்த்தல்<br>• மீண்டும் தொடங்கும் மிடுக்கு/ தேரும் திங்களும் மாஹாகவி து. உருத்திரமூர்த்தி | 02 |
| | | 3.7<br>கூத்துக்களின் தர்க்கத் தருக்களின் பயன்பாட்டை அறிவோம். | • கூத்துக்களில் தர்க்கத் தருக்கள் பயன்படுத்தப் பெறும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.<br>• பயிற்றுவிக்கப்பெறும் தர்க்கங்களைப் பாடுவார்.<br>• தாளக்கட்டுக்களை உரிய ஓசையுடன் பாடுவார். | • தர்க்கத் தருக்கள்<br>• தாளக் கட்டுக்கள் | 02 |
| | 4.0<br>இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக,பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.1.1<br>பாடசாலை நாடகங்களில் கல்வி, விழுமியப் பெறுமானங்களைக் கண்டறிவோம். | • பாடசாலை நாடகங்களில் மேற்கிளம்பும் கல்வி, விழுமியப் பண்புகளைத் தமக்கிடையே பரிமாறிக் கொள்வார்.<br>• விழுமியப் பண்புகளைத் தமது நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடிப்பார். | • பாடசாலை நாடகத்தில் கல்வி, விழுமியப் பெறுமானங்களின் வகிபாகம் பற்றிய பயில்வு | 02 |
| | | 4.3<br>ஈழத்தில் சிறுவர் அரங்கின் வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம். | • ஈழத்தில் சிறுவர் அரங்கின் வளர்ச்சி பற்றித் தெரிந்திருப்பார்.<br>• சிறுவர் அரங்கிற்கூடாக வெளிப்படும் விழுமியம் சார் கருத்துக்களை இனங்காண்பார்.<br>• சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் பற்றி எடுத்துரைப்பார்.<br>• சிறுவர் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • ஈழத்தில் சிறுவர் அரங்கின் வளர்ச்சி(சுருக்கமானது) | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4.5.1 காவடியை ஆடிக் கற்போம். | • நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களைப் பட்டியலிடுவார்<br>• காவடியின் ஆட்டக் கோலங்களை ஆடுவார்.<br>• காவடிப் பாடல்களைப் பாடுவார்.<br>• காவடி ஆட்டத்தினை அரங்கில் பிரயோகிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.<br>• காவடியில் பல்வேறு ஆட்டக் கோலங்கள் உள்ளமையை எடுத்துரைப்பார். | • காவடி | 02 |
| | 5.0 நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1 'அரசனின் புத்தாடை' என்ற நாடக எழுத்துருவை வாசிப்பு நிலையில் நயப்போம். | • நாடக எழுத்துருவை வாசிப்பார்.<br>• நாடக எழுத்துருவை வாசித்து நயப்பார்.<br>• நாடக வாசிப்பின் ஊடாக வாழ்வியல் அம்சங்களுடன் நாடகச் சூழமைவுகளை ஒப்பு நோக்குவார்<br>• நயத்தலுக்குரிய அம்சங்களை முன்வைப்பார். | • நாடக எழுத்துரு மாவை. நித்தியானந்தனின் 'அரசனின் புத்தாடை' | 02 |
| | | 5.2 நாடகத்தின் எழுத்துரு, கரு, கதைப்பொருள், பாத்திரங்கள் என்பவற்றை அறிவோம். | • நாடகத்தின் கரு பற்றி எடுத்துரைப்பார்.<br>• நாடகத்தின் கதைப் பொருள் பற்றிக் கூறுவார்.<br>• நாடக எழுத்துருவில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களைப் பற்றிக் கருத்துரைப்பார். | நாடகத்தின்<br>• கரு<br>• கதைப்பொருள்<br>• பாத்திரங்கள் | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5.3.1 அரசனின் புத்தாடை என்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்போம் | • விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார்.<br>• நாடக எழுத்துரு ஒன்று ஆற்றுகையாக மாறுகின்ற விதத்தினை உணர்ந்திருப்பார்.<br>• நாடக ஆற்றுகையில் சித்திரிப்பின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• நாடக ஆற்றுகையின் ஊடாக வெளிப்படும் சித்திரிப்பு நுட்பங்களை எடுத்துரைப்பார். | • நாடக ஆற்றுகையை நயத்தல். | 02 |